www.tamilarangam.net

# பிரான்சில் தமிழ்ப் பத்திரிகைகளுக்குத் தடை.

காட்சி –1

16-07-95 அன்று பிரான்சின் தலைநகரமான பாரிஸ் நகரில் உள்ள "பாரிஸ் ஈழநாடு" பத்திரிகை அலுவலகத்தினுள் புகுந்த புலிகளின் காடைக் கும்பல் ஒன்று ஈழநாடு முகாமையாளர் திரு. எஸ். பாலசந்திரனைக் கடுமையாகத் தாக்கியமை புகலிடத்தில் விடுதலைப் புலிகள் மேற்கொண்டிருக்கும் மக்கள் விரோத, ஜனநாயக எதிர்ப்பு, எதேச்சாதிகாரத்தின் வெளிப்பாடாகும்.

விடுதலைப் புலிகளின் ஒரு ஆதரவுப் பத்திரிகையாகவே தொடங்கி கடந்த 5 ஆண்டுகளாக ஐரோப்பாவின் வியாபாரப் பத்திரிகையாக, முன்னணியில் நிற்கும் தமிழ்ப் பத்திரிகையாக, புலிகளின் ஊதுகுழலாக நின்று பல சந்தர்ப்பங்களில் பத்திரிகா தர்மத்தை மீறிய நிலையிலும் கூட இப்பத்திரிகை செயற்பட்டு வந்திருக்கிறது.

ஆனால் விடுதலைப் புலிகள் தங்களின் பணபலம், ஆட்பலம், ஸ்தாபன அதிகாரம் ஆகியவற்றின் மூலம் *ஐரோப்பாவில் ஈழமுரசு பத்தி*ரிகையை நடாத்த ஆரம்பித்தபோதுதான் பிரச்சனை முற்றி வெடிக்கத் தொடங்கியது. முன்னாள் "சற்றடே றிவியூ" ஆசிரியரும், இன்றளவும் சந்திரகாசனைத் தனது இலட்சிய புருஷனாக மதிப்பவரும், மாத்தையாவோடு மிக நெருங்கிய பரிச்சயமும், பாசமும் மிகுந்தவருமான திரு. எஸ் சிவநாயகத்தின் ஆலோசனையுடன் ஈழமுரசு பத்திரிகையைத் தொடங்கி நடாத்தியபோதுதான் பாரிஸ் ஈழநாட்டின் விற்பனையுடனும், அதன் விளம்பர வருமானத்துடனும் எந்த வழியாலும் போட்டி போட்டு வெல்ல முடியாது என்பதனை நடைமுறை பூர்வமாக உணரமுடிந்தது.

இந்நிலையில் அடாவடித்தனமாக பாரிஸ் ஈழநாடு பத்திரிகையை வீழ்த்தும் வேலையில் புலிகள் இறங்க ஆரம்பித்தனர். தங்களின் ஸ்தாபன ஆட்பலத்தைப் பயன்படுத்தி சுவிஸ் போன்ற ஏனைய ஐரோப்பிய நாடுகளில் உள்ள பத்திரிகை முகவர்களை அச்சுறுத்தி பாரிஸ் ஈழநாடு பத்திரிகையை விநியோகிக்க வேண்டாமென தடுத்து நிறுத்தினர்.

லண்டன் போன்ற இடங்களில் வீரகேசரி பத்திரிகையின் விலையை சாதாரணமாக விற்கும அதன் விலையிலும் பார்க்க மிகக் கூடிய விலை வைத்து விற்குமாறு கடைக்காரர்களை நிற்பந்தித்தனர். பலவந்தமாக உயர்த்தப்பட்ட இவ்வீரகேசரி விலை அதிகரிப்பின் காரணமாக மக்கள் தங்கள் ஈழமுரசு பத்திரிகையை விலைகொடுத்து வாங்குவார்கள் என புலிகள் எதிர்பார்த்தனர். பல கடைகளில் ஈழநாடு பத்திரிகையை வாடிக்கையாளர்களின் கண்களுக்குத் தெரியாதவாறு மறைத்து வைத்து விற்கவேண்டுமென்றும், ஈழமுரசு பத்திரிகையை மாத்திரமே வாடிக்கையாளர்களின் பார்வைக்குத் தெரியுமாறு வைத்து விற்கவேண்டுமென்றும் கடைக்காரர்களை வற்புறுத்தினர்.

புலிகளின் ஆதரவாளர்கள் ஈழமுரசுதான் தங்கள் பத்திரிகையெனக் கூறி அதன் விற்பனையைப் பெருக்கும் முயற்சிகளில் இறங்கினர். தமது பத்திரிகை ஒரு நடுநிலைப் பத்திரிகை எனக் காட்டுவதற்காக புகலிடத்தில் வாழும் சந்தர்ப்பவாத எழுத்தாளர்கள் ஈழமுரசில் எழுத வைக்கப்பட்டனர். அதிலும் சிலபேர் காசைக் காட்டியவுடன் வாராந்தம் குத்தகை எடுத்து எழுத ஆரம்பித்தனர். வெளியே முகம் காட்ட வெட்கப்பட்ட சிலர் புனைபெயருக்குள் புகுந்துகொண்டு எழுதினர்.

புலிகளின் "தமிழீழத்தில்" சகல தென்னிந்திய சினிமாக்களும், பத்திரிகைகளும் தடைசெய்யப்பட்டு விடுதலைப் புலிகளின் போராட்ட சினிமாப் படங்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்ட நிலையில் வாராவாரம் இந்தியத் தமிழ் சினிமா பற்றி விலாவாரியாக எழுத ஆரம்பித்தமை தங்கள் விடுதலை இயக்கத்தின் தாயக மண் என்னும் இலட்சியத்திற்கு ஊறு விளைவிக்கும் என்பது தெரிந்திருந்தும் பத்திரிகை விற்பனை என்ற அதிஉன்னத இலட்சியத்தின் முன்னால் இது வெறும் வியாபார முரசாகவே மாறியது. இப்படியெல்லாம் பண்ணிப் பார்த்தும் பாரிஸ் ஈழநாடு அதன் வாசகர் மத்தியில் பெற்ற ஆதரவை ஈழமுரசு பெற்றுக் கொள்ளமுடியவில்லை. இந்த நிலையில் ஒரு பத்திரிகைத் துறையைச் சார்ந்த எவருமே நினைத்துப்பார்க்க முடியாத மிகக் கேவலமான நடவடிக்கைகளில் புலிகள் இறங்கினர். அதன் விளைவுதான் 16-07-95ல் ஈழநாடு முகாமையாளர் திரு.எஸ்.பாலசந்திரன் புலிகளால் மிக மோசமாகத் தாக்கப்பட்ட நிகழ்வாகும். 'பொன்னாலையை இலங்கை இராணுவம் கைப்பற்றிவிட்டது' என்பதற்குப் பதிலாக 'துன்னாலை' எனத் தவறுதலாக அச்சேற்றியதுதான் காரணம் எனக் கூறிக் கொண்டு பிரபல இலங்கைத் திரைப்படக் கலைஞர் திரு.ஏ.ரகுநாதன் முன்னிலையில் வைத்து பாலச்சந்திரனை கண்மூடித்தனமாகத் தாக்கினார்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"எங்களுக்கு எப்படிப் பத்திரிகை நடத்துகிறது என்று தெரியும். நீ இன்னும் ஒரு மாதத்தில் பேப்பரை மூடவேண்டும். ஐரோப்பாவில் ஒரேயொரு பத்திரிகைதான் வரவேண்டும். அது எங்கள் ஈழமுரசு பத்திரிகையாகத்தான் இருக்கும். இன்னும் ஒரு மாதத்தில் பத்திரிகையை நிறுத்தாது போனால் 'சபாலிங்கத்தின்' கதிதான் உனக்கும் நடக்கும்" என்றும் அந்தக் கோஷ்டி பாலச்சந்திரனை எச்சரித்துவிட்டுச் சென்றுள்ளது. காயடைந்த பாலச்சந்திரனை அவரது வீட்டுக்குச் சென்று பார்த்த விடுதலைப்புலிகளின் 'பினாமி' அமைப்பான 'தமிழர் ஒருங்கிணைப்புக் குழு'வின் பொறுப்பாளரும், 'ஈழமுரசின்' உரிமையாளருமான மனோகரனிடம் "அநியாயம் செய்தவர்களைக் கடவுள் தண்டிப்பார்" என்று பாலச்சந்திரன் கூறியிருந்தாலும் கடவுளை மட்டும் நம்பியிராமல் பொலிசில் புகார் செய்த அவரது அசாத்திய துணிச்சல் மிகவும் வரவேற்கக்கூடியது.

"பாரிஸ் ஈழநாடு" ஒரு நேர்மையான பத்திரிகை நெறிமுறையை கடைப்பிடித்து வந்திருக்கிறது என்று நாம் கூற வரவில்லை. ஆயினும் ஒரு பத்திரிகையானது அச்சுறுத்தல், அதிகாரம், மிரட்டல், அடாவடித்தனம், வன்முறைத் தாக்குதல், மரண அச்சுறுத்தல் ஆகியவற்றின் மூலம் நுத்தப்படகூடாது, நிறுத்தபபட முடியாது என்ற நியாயத்தையே நாம் கோருகிறோம். இத்தகைய ஓர் அரசியல் வன்முறை எழுத்துச் சுதந்திரத்தை, பத்திரிகைச் சுதந்திரத்தை, வெளியீட்டுச் சுதந்திரத்தைக் குழிதோண்டிப் புதைக்க முனையும் நேரத்தில் ஈழமுரசு பத்திரிகையோடு தொடர்புபடும் எழுத்தாளர்களும், அடிப்படை மனித உரிமையின் பேரில் நம்பிக்கைகொண்ட வாசகர்களும் ஈழமுரசை முற்றாகப் பகிஷ்கரிப்பதுவே இப்படியான 'எழுத்துலக அராஜகத்திற்கு' எதிரான குரலுக்கு ஆதரவு வழங்குவதாகும்.

காட்சி - 11

கொழும்பிலிருந்து வெளிவரும் 'தினமுரசு' யாருடைய பத்திரிகை என்று எழுதப்போய் 'நுணலும் தன் வாயால் கெடும்' என்பதற்கொப்ப ஈழமுரசு நண்டார் எழுதப்போக, தினமுரசு தனது 16.07.95 பதிப்பில் 'தடாலடி' கொடுத்ததினால் விடுதலைப் புலிகளின் உயர்மட்டக் குழு ஆடிப்போயிருக்கிறது என்பது மெய்யே. ஊரில் சனங்கள் 'செல்' தாக்குதலுக்குட்பட்டு பயம், பசி, பட்டினியால் நாளும் பொழுதும் செத்துக்கொண்டிருக்கும்போது, பிரான்சில் றெஸ்ரோறன்றுகளில் இராப்பகலாய் அடிமைகளாக பத்திரோன்மாரின் கீழ் அடித்துக்கொடுத்து இயக்கத்திற்கென்று கொடுத்த காசில் புலிகளின் பிரான்ஸ் தலைமைப்பீடம் மாதாமாதம் 10 முதல் 15 ஆயிரம் பிராங்குகள் சம்பளத்தில் கார், மோபையில் ரெலிபோன், மெய்ப்பாதுகாவலர் போன்ற இன்னோரன்ன வசதிகளுடன் வாழ்ந்துகொண்டிருப்பதை மேற்படி பத்திரிகை வெளிச்சம் போட்டுக் காட்டியதையடுத்து பிரான்சில் புலிகள் இயக்கத்திற்கு தொடர்ந்து பணம் கொடுத்து வந்த அனுதாபிகள் மத்தியில் பெரும் அதிருப்தி எழ ஆரம்பித்தது. பிரான்சில் இயக்கத் தலைமைப்பீடம் போராட்டத்தின் பேரில் சொகுசாக வாழ்வது குறித்து ஏற்கனவே இயக்கத்தின் தீவிர ஆதரவாளர்கள், உறுப்பினர்கள் புலிகளின் பிரான்சுக் கிளையிலிருந்து வெளியேறி ஒதுங்கிய நிலையையில் தினமுரசின் செய்தியானது இவ் அதிருப்தி நிலையை மேலும் ஆழமாக்கிவிட்டுள்ளது. ஆயினும் 'தினமுரசு' கடைகளுக்கு வந்தவுடன் சுடச்சுட விற்பனையாகிவிடுவதால் தினமுரசுக்கூடாக இச்செய்தி பரவுவதை புலிகளால் தடுக்கமுடியவில்லை. பல அங்கத்தவர்கள், மேற்படி 10,000 பிராங்குகள் சம்பளமானது மிகக்குறைந் தொகையே என்றும் இதைவிட பெருந்தொகைப் பணம் இவர்களால் இயக்க நிதியில் இருந்து தமது சொகுசு வாழ்க்கைக்கு செலவிடப்படுகிறது என்றும் தெரிந்துகொண்டபோது இயக்க அனுதாபிகள் பிரான்சுக் கிளையின் தலைமைப் பீடத்தின்மேல் கோபம் கொள்ள ஆரம்பித்தனர்.

இதன் உடனடி நடவடிக்கையே இனிமேல் பிரான்சில் தினமுரசு பத்திரிகை விற்பனை செய்யக்கூடாதென புலிகள் கடைகாரர்களை மிரட்டி விடுத்துள்ள பத்திரிகைத் தடையாகும். பிரான்சில், ஈழமுரசு, பாரிஸ் ஈழநாடு ஆகிய இரண்டு பத்திரிகைகளையும் விட அதிகம் விற்பனையாகும் வாரப் பத்திரிகை தினமுரசேயாகும். பாரிஸ் ஈழநாடு பத்திரிகையையும், தினமுரசு பத்திரிகையையும் நிறுத்திவிட்டால் ஈழமுரசு பத்திரிகை அமோக விற்பனையாகும் என்று திரு.எஸ்.சிவநாயகம் ஆலோசனை வழங்குவாரேயானால் மிஸ்ரர் சிவநாயகம் நீங்கள் மிகப்பெரும் தவறு இழைக்கிறீர்கள்.

இவ்விரு பத்திரிகைத் தடையையும் எதிர்த்துக் குரல் கொடுக்கவேண்டியது சுதந்திரத்தை, மனித உரிமையை, எழுத்தை நேசிக்கும் தமிழ் வாசகர்கள் ஒவ்வொருவரினதும் இன்றியமையாத கடமையாகும்.

'தீதும் நன்றும் பிறர் தர வாரா'
குழுவினர்
19-07-95

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்